# தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்

எண். 208/2, ஜவஹர்லால் நேரு சாலை, அரும்பாக்கம், சென்னை 600 106

தொலைபேசி எண்: 2363 5010, 2363 5011 நிகரி: 2363 8282, 2363 8283

மின்னஞ்சல் - tnsec.tn@nic.in இணையதளம் - www.tnsec.tn.nic.in

## செய்தி வெளியீடு

வெளியீடு எண். 7 நாள் 29.10.2019

**உள்ளாட்சி அமைப்புகளுக்கான வாக்காளர் பட்டியல் மற்றும் வாக்காளர் குறித்த விவரங்கள் குறித்து செய்தி வெளியீடு**

...

தமிழ்நாட்டில் உள்ள ஊரகம் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான வாக்காளர் பட்டியல் - 2019, தொடர்புடைய சட்டமன்ற தொகுதிகளுக்கான வாக்காளர் பட்டியல்களில் உள்ள விவரங்களைக் கொண்டு தயாரித்து அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளின் வாக்காளர் பதிவு அலுவலர்களால் 04.10.2019 அன்று அனைத்து மாவட்டங்களிலும் வெளியிடப்பட்டன. மேற்படி உள்ளாட்சி அமைப்புகளுக்கான வாக்காளர் பட்டியல் மற்றும் வாக்காளர் குறித்த விவரங்கள் **"https://www.tnsec.tn.nic.in"** என்ற தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய இணையதளத்திலும் 4.10.2019ல் வெளியிடப்பட்டன.

இந்த வசதியை பயன்படுத்தி வாக்காளர்கள் அவர்களின் பெயர், அவரது வார்டு மற்றும் எந்த வாக்குச்சாவடியில் வாக்களிப்பது போன்ற விவரங்களை அறிந்து கொள்ளலாம்.

உள்ளாட்சி அமைப்புகளுக்கான வாக்காளர் பட்டியலில் இடம் பெறாத வாக்காளர்கள் முதலில் அவர்களது பெயர்களை தொடர்புடைய சட்டமன்றத் தொகுதிக்கான வாக்காளர் பட்டியலில் சேர்க்க வேண்டும். அதற்கு அவர்கள் தொடர்புடைய சட்டமன்ற தொகுதிக்கான வாக்காளர் பதிவு அலுவலரிடமோ அல்லது **"http://www.nvsp.in"** என்ற இணையதளத்தின் வாயிலாகவோ அவர்களது பெயர்களை தொடர்புடைய சட்டமன்றத் தொகுதிக்கான வாக்காளர் பட்டியலில் சேர்க்க online மூலம் விண்ணப்பிக்கலாம். online மூலம் விண்ணப்பிக்க இயலாதவர்கள் தொடர்புடைய சட்டமன்றத் தொகுதிக்கான வாக்காளர் பதிவு அலுவலர் அல்லது தொடர்புடைய வருவாய் கோட்டாட்சியர் அல்லது வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு நேரில் சென்று உரிய படிவத்தில் விண்ணப்பித்துக் கொள்ளலாம். சென்னை பெருமாநகராட்சியினை பொறுத்தவரை தொடர்புடைய மண்டல அலுவலகத்திலோ அல்லது சென்னை பெருமாநகராட்சி தலைமை அலுவலகத்தில் உள்ள வருவாய் அலுவலர், தேர்தல் (பொது) பிரிவிலோ விண்ணப்பித்துக் கொள்ளலாம்.

தற்போது, சட்டமன்றத் தொகுதிகளுக்கான வாக்காளர் பட்டியலில் புதிதாக பெயர் சேர்ப்பதற்கும், ஏற்கெனவே வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றவர்கள் திருத்தம் அல்லது மாறுதல் கோரி விண்ணப்பிப்பதற்கும் இந்திய தேர்தல் ஆணையத்தால் அறிவித்துள்ள சிறப்பு சுருக்கமுறை திருத்தம், 2020 பட்டியலுக்காக நவம்பர் 18ம் தேதி வரை கால அவகாசம் நீட்டிக்கப்பட்டுள்ளதால் இந்த வாய்ப்பினை பயன்படுத்திக் கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகின்றது. அவ்வாறு தொடர்புடைய சட்டமன்றத் தொகுதிக்கான வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்பட்ட பின்னரே தொடர்புடைய உள்ளாட்சி அமைப்புகளுக்கான வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்படும் என்றும் தொடர்புடைய உள்ளாட்சி அமைப்புகளில் வாக்காளர் பெயர் இடம் பெற்றால்தான் வருகின்ற உள்ளாட்சி தேர்தலில் வாக்களிக்க இயலும் என்பதால் இந்த வாய்ப்பினை முறையாக பயன்படுத்த கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஒ. ... 29/10/19

மக்கள் தொடர்பு அலுவலர்